# எனது கதை



2019 ஆம் ஆண்டு வைகாசி மாதம் கபிரல் ரீவியினர் எனது வீட்டுக்கு வந்தபோது எனக்குச் சனி பிடித்தது. இதுவரை காலமும் வருடா வருடம் குறைந்தது ஐந்து புத்தகங்களையாவது எழுதுவேன். அவர்கள் தொடர்ந்து வந்தமையால் என்னால் எழுத முடியவில்லை. அதனால் எழுதுவதைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. நான் எழுதும் போதே எழுதும் நூலை விற்றுவிடுவேன். அதனால் எழுதி முடிந்ததும் அது நூலுருவாகிவிடும். அதன் பின் எழுதவும் இல்லை. வெளியிடவும் இல்லை. பெரும் நட்டமேற்பட்டது. பரவாயில்லை 2000 வருடங்களாக யாரும் 1330 குறள்களுக்கும் கதை எழுதவில்லை. நான் எழுதினேன். தமிழ் நாட்டிலும் இங்கும் வெளியிட்டுப் பெரும் பணமும் புகழும் சம்பாதித்தேன். அது போல 1330 குறள்களையும் கதைகளாகச் சொல்லலாம் என்ற போது மிக்க மகிழ்ச்சியடைந்தேன். யாரும் 1330 குறள்களுக்கும் யாரும் இதுவரை கதை சொன்னதில்லை.

உற்சாகமும் மகிழ்ச்சியும் பெருமையும் மனதில் பொங்க கதை சொல்ல ஆரம்பித்தேன். கிட்டத்தட்ட 300 குறள்களுக்குக் கதை சொல்லி முடித்த பின்பும் கதையை ஒளிபரப்பவில்லை. பல முறை வற்புறுத்தியதனால் ஒளிபரப்பைத் தொடங்கினர். மிகுந்த மகிழ்ச்சியுண்டானது அது ஒரு சில நாட்கள் தான் நீடித்தது. பின் அவர்கள் தமது மேதாவித்தனத்தைக் காட்டத் தொடங்கினர். கதையை ஒழுங்காகப் போடுவதில்லை. சில குறள்களை விட்டு விட்டுப் போடுவார்கள். போட்டதைத் திரும்பிப் போடுவார்கள். சில வேளைகளில் ஒரு அதிகாரத்தைப் போடாமல் விட்டு விடுவார்கள்.

இந்த நிலையில் 870 குறள்களுக்குக் கதை சொல்லி முடித்தபோது அவர்கள் பத்துப்பேரின் ஆக்கங்களை ஒன்றாகச் சேர்த்து எனது கதையையும் இணைத்து ஒளிபரப்பினர்.

எனக்குக் கோபத்தை விட துக்கம் தான் மேலிட்டது. சிவனை வணங்கி ஆராதித்துத் தான் எதையும் நான் செய்வேன். இதுவரை எனது ஆக்கங்கள் யாவற்றையும் பெரும் புகழுக்குட்படுத்திய சிவன் ஏன் இதில் சோதிக்கிறார் என்ற எண்ணத்திற்கு இதுவரை விடை கிடைக்கவில்லை. இப்போது கதை சொல்ல மறுத்துவிட்டேன். தொடர்ந்தும் அவர்கள் ஒழுங்காகப் போடுவதில்லை. பலர் என்னைக் கேட்கின்றனர். நான் என்ன பதிலைச் சொல்வது. இதுவரை சொல்லப்படாத ஒன்றைச் சொல்வதால் உலகெங்கிலும் உள்ள எனது வாசகர்கள் மிகவும் வருதப்படுகின்றனர். இதை உரியவர்கள் உணர்வதாக இல்லை. உணரவும் மாட்டார்கள்.

இந்த நிலை யாழ்ப்பாணத்திற்குப் புதியதல்ல பழக்கப்பட்டது. நான் 1989 ஆம் ஐப்பசி மாதம் அதிபராக நியமனம் பெற்று யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு நியமிக்கப்பட்டேன். 1990 ஆம் ஆண்டு தை மாதம் கோப்பாய் மகாவித்தியாலயத்திற்கு அப்போதைய கல்விப் பணிப்பாளரான செல்வி திலகவதி பெரியதம்பியால் காரணம் எதுவும் இன்றி மாற்றப்பட்டேன். நான் மாறிச் செல்லும் போது காரணம் கேட்கவில்லை. உமக்கும் ஒரு நாள் காரணமில்லாத தண்டனைக்குரிய இடமாற்றம் கிடைக்கும் என்று கூறிச் சென்றேன். மூன்று மாதங்களின் பின் அவர் பதவியில்லாப் பதவிக்கு மாற்றப்பட்டார்.

பின்பு திரும்பவும் நாவலர் தமிழ் வித்தியாலத்திற்குத் 01.01.1991 இல் அதிபராக இடம் மாற்றபட்டேன். அன்றில் இருந்து 01.09.2005 வரை சுமார் 15 வருட காலம் அதிகாரிகளின் வரட்டுப் பிடிவாதத்தால் அங்கேயே இருந்தேன். அதனால் எந்தவிதமான பாதிப்பும் எனக்கு ஏற்படவில்லை. பெயரும், புகழும், கௌரவமும் கிடைத்தது. யாருக்கும் கிடைக்காதளவு புகழ் எனக்குக் கிடைத்தது. நான் ஒரு பட்டதாரி. முதலாம் தர அதிபர். தரமில்லாத பல ஆசிரியர்கள் தான் யாழ் மாவட்டத்தில் உள்ள உயர்தரப் பாடசாலைகளின் அதிபர்களாக நியமிக்கப்பட்டனர். இதற்குப் பல காரணங்கள் உண்டு.

யாழ்ப்பாணம் சாதியமைப்பைக் கடுமையாகப் பின்பற்றும் ஒரு மிகவும் பிற்போக்கான ஒரு மாவட்டம் சில பாடசாலைகள் பரம்பரையைப் பேணுகின்றன. அந்தப் பரம்பரையில் வந்தவன் பைத்தியக்காரர்களாக இருந்தாலும் அவனையே கல்விப் பணிப்பாளர், பிரசித்தி பெற்ற உயர்தரமுள்ள பாடசாலைக்கு அதிபராக நியமிப்பர். இதை விட உயர் அதிகாரியின் மனைவி ஆதிக்கம் செலுத்துவார். இந்த நிலை யாழ் மாவட்டத்தில் உள்ள சகல IAB, IC பாடசாலைகளிலும் இடம்பெற்றது. என்னைப் போலப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த பட்டதாரிகள் கூட தரம் II, தரம் III பாடசாலைகளில் தான் அதிபர்களாகக் கடமை புரிந்தனர். இந்த நிலையால்தான் முதலாமிடத்தில் இருந்த யாழ் மாவட்டம் கடைசி நிலையை அடைந்தது. இவற்றைப் பற்றி எழுதியமையாலும், தட்டிக் கேட்டமையாலும் தான் எனது வாழ்வில் பல தாங்க முடியாத துன்பங்கள் வந்து சேர்ந்தன. இதில் புதினம் என்னவென்றால் எந்தவிதமான அறிவும் இல்லாத ஒரு நாற்பது வயதுப் பிரமுகர் மிகவும் தரமான திறமையான கல்வியில் மேம்பட்ட சமூகம் வாழும் ஒரு பாடசாலைக்கு அதிபராக நியமனம் பெற்றார் இது

உலகமகா அதிசயம். வேறு எங்கும் நடக்கவில்லை இனி நடக்கவும் மாட்டாது. கல்வி அதிகாரிகள் தான் தமக்கு வேண்டிய பொருத்தமற்றவர்களை அதிபர்களாக நியமித்து யாழ் மாவட்டத்தின் கல்வியை அழித்தனர். இதை எழுதியமையால் தான் நான் 15 வருடங்களும் ஒரு மூன்றாந்தரப் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றினேன்.

தேடுவாரற்றுக் கிடந்த பாடசாலை இமயமாக உயர்ந்தது. கோப்பாயில் உள்ள ஆரம்ப வகுப்பில் சேரும் மாணவர்கள் எனது பாடசாலைக்கு வரத் தொடங்கினர். ஒரு கட்டத்தில் ஒரு பாடசாலையின் முழு மாணவர் தொகை 25 இற்கும் குறைந்தது. என்னைப் பழிவாங்குவதற்காக எடுத்த நடவடிக்கை பிள்ளையார் பிடிக்கக் குரங்காக மாறிய கதையாயிற்று. இந்த நிலையில் செய்வதறியாது திகைத்த கல்வி பணிப்பாளர் என்னை மாற்றத் திட்டமிட்டார். இதை அறிந்த ஊரவர் ஆர்ப்பாட்டத்துடன் கல்வித் திணைக்களம் சென்றனர். அந்த முறையும் பிழைத்தமையால் பாடசாலை அமைந்த கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதிக்கு வெளியே மாணவர்களை எடுக்கக் கூடாதென்றும் தரம் ஒன்றில் இருந்த ஒரு வகுப்பைக் குறைக்குமாறு கோரினர் நான் எழுத்து மூலம் தங்கள் பணிப்புரையை வழங்குங்கள் நான் இதில் தீர்மானிக்க முடியாது என்றேன். அதனால் அப்போதிருந்த கல்விப் பொறுப்பாளரை அனுப்பினார் அவர் வந்தபோது ஒருவர் கேட்டார், "கல்விப் பணிப்பாளரின் பிள்ளைகள், வேறு ஆசிரியரின் பிள்ளைகள் பட்டணத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் படிக்கலாம். எமது பிள்ளைகள் ஊர்ப் பாடசாலையில் படிக்க நினைத்தால் வகுப்பைக் குறைக்கிறீர்கள் இது நியாயமா?" என்றனர். வந்தவர் பதில் கூறாமல் புறப்பட்டுவிட்டார்.

அரக்கர்கள் சிவனிடம் வரத்தைப் பெற்றுவிட்டுத் தம்மால் ஆகாத செயல்கள் எதுவுமில்லை என்று நினைத்துப் பெரும் அட்டூழியங்களைச் செய்தனர் இறுதியில் அழிந்தனர். இப்போது பண பலம், அதிகார பலம், அரசியல் பலமுடையோர் அரக்கர்கள் போல நடந்து கொள்கின்றனர். இவையெல்லாம் கட்டுக்கதை, புழுகு என்று பலர் சொல்வர். இருப்பினும் அவை எமக்குப் பாடங் கற்பிக்கின்றன. இதை மறுக்க முடியாது. அதிகாரிகள் கதிரையை விட்டு இறங்கினால் நாயாகக் கூட மதிக்கமாட்டார்கள் இது பலருக்கு நடந்தும் அதைப் பார்ப்போர் உணர்வதில்லை.

நான் மிக மிகப் பொறுமையாகவும், அன்பாகவும், விட்டுக் கொடுத்தும் அனைவரையும் மதித்தும் தான் எனது கடமையைச் செய்து வந்தேன். அதனால் அதிகாரிகளைத் தவிர ஏனையோர் என்மீது அதிக அன்பு கொண்டிருந்தனர். இதுவும் கல்வித் திணைக்களத்திற்குப் பெரும் இடைஞ்சலாக இருந்தது. கல்வித் திணைக்களத்தினர் எதைச் செய்வதனாலும் எனது விருப்பத்திற்கு மாறாகச் செய்ய முடியாது. அதனால் ஏனைய திணைக்களங்களில் உள்ள அதிகாரிகளும் என்மீது வெறுப்புள்ளவர்களாகவே இருந்தனர்.

அதனால் தான் எனக்கு எழுத்துச் சார்ந்த எந்தப் பரிசோ, விருதோ கிடைக்கவில்லை. 28.03.2003 ஆம் ஆண்டு எனது ஆத்திசூடிக் கதைகள் என்ற நான்கு நூல்கள் மலேசியாவில் நடைபெற்ற உலகச் சைவமகா நாட்டில் உலகில் உள்ள சிறந்த கல்வி மான்கள் மத்தியில்

வெளியிடப்பட்டது. அதை விடத் திருவருட்பயன் கதைகள் என்ற நூலுக்குத் திருவாவடுதுறை ஆதீனம் மிகச் சிறந்த தத்துவக் கதை எனச் சான்றிதழ் தந்து சிறப்பித்தது. அத்துடன் மாயை பற்றிய தத்துவக் கதைகள் மிகவும் தரமான தத்துவங்களை விளக்கும் கதை என்ற சிறப்பையும் பெற்றுத் தந்தது. உலகில் இதுவரை யாரும் எழுதாதவற்றைத் தான் எழுதி வருகிறேன். அதனால் வெளிநாட்டு அறிஞர்கள் பாராட்டுகின்றனர். இவற்றிற்கெல்லாம் இங்கு பரிசு தரவோ, விருது தரவோ, பாராட்டவோ யாரும் இல்லை. உரியவர்கள் தமக்குத் தேவையானவர்களின் நூல்களுக்கு பரிசும், விருதும் கொடுக்கிறார்கள். அவை வெளியிட்ட மறு நாள்க் காணாமல் போய்விடும். இலங்கை அரசால் விருது கொடுக்கப்பட்ட நூலொன்றை முடிந்தால் யாராவது ஒருவர் எனக்குத் தந்துதவவும்.

2018 ஆம் ஆண்டு இலங்கை அரசு விருதொன்றைக் கொடுக்க விரும்புவதாகக் கூறியதால் அப்போதிருந்த அரசாங்க அதிபரின் கலாச்சார உத்தியோகத்தர் என்னை நேர்முகங்காண அழைத்தார். அதனால் நான் வெளியிட்ட சுமார் 75 நூல்களுடன் சென்று சந்தித்தேன். அவற்றைப் பார்த்து மிக்க ஆச்சரியப்பட்ட அவர் உங்களுக்கு 100 புள்ளிகள் வழங்கியுள்ளோம் என்றார். நான் மகிழ்ச்சியடையவில்லை. “கைக்கு வர முன் நெய்க்கு விலை பேசேல்” என்பது முதுமொழி அதனால் தான் நான் நம்பவில்லை. ஒரு முறை எனது பாடசாலைக்கு வந்த கல்வித் திணைக்கள மேற்பார்வைக் குழு ஒவ்வொரு வகுப்பறைகளையும் பார்த்து விட்டு அதிசயப்பட்டனர். சில ஆசிரியர்களின் செயற்பாட்டை மெச்சினர். ஆசிரியைக்குச் சரியான மகிழ்ச்சி, இனிப்புக் கொண்டு வந்தா அப்போது நான் சொன்னேன், “எமது பாடசாலைச் சரித்திரத்தில் ஒருவரைப் புகழ்ந்தால் அது அவருக்கு ஆபத்தைத் தேடித் தரும். அடுத்த வாரம் மாற்றம் கிடைக்கலாம்” என்று சிரித்தேன்.

ஆசிரியரின் மகிழ்ச்சி மறந்து சோகம் குடிகொண்டது, “இது நான் படித்த பாடசாலை நான் நல்ல முறையில் கற்பிப்பதால் எந்த கடவுளாலும் மாற்ற நீங்கள் விடமாட்டீர்கள்” என்றார். நான் கூறியபடி அவருக்கு கல்விப்பணிப்பாளரின் செல்லத்துக்குரிய பாடசாலைக்கு மாற்றம் வந்தது. ஊரவர் போராடியமையால் மாற்றம் தடைப்பட்டது.

அதனால் விருது கிடைக்கும் என்ற அதிகாரியைக் கேலியாகப் பார்த்துச் சிரித்து விட்டு வந்தேன். மறுவாரம் எந்தப் புத்தகமும் எழுதாத ஒரு சங்கீத வித்துவானுக்கு விருது கொடுக்கப்பட்டது. இங்கு ஒரு வழக்கம் என்னவென்றால் அதிகாரிகள் ஏற்கனவே விருதுக்குரியவரைத் தேர்ந்தெடுத்துவிட்டுத் தான் நேர்முகம் காண்பர். நேர்முகம் காண்பர். தகுதியை யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். அது விருப்புக்குரியவருக்கு வழங்கப்படும். அதைத் தெரியாத நேர்முகம் காண்பவர் உண்மையான நிலைப்பாட்டைத் தன்னை மறந்து கூறி விட்டார். இது தான் காலாகாலமாக நடைபெற்று வருகிறது. இது அனுவபப்பட்ட எனக்குத் தெரியும்.

அதனால் இவ் விடயத்தைப் பற்றி எனது முகநூலில் மிக மிக விரிவாக எழுதினேன். எனது இலட்சக்கணக்கான வாசகர்கள் வாசித்து விட்டுக் கண்டித்தனர். இது அதிகாரிகளுக்குப் பெருந் துன்பத்தைக் கொடுத்தமையால் அவர்கள் பகை கொண்டதோடு மட்டுமல்லாது பெரிய பெரிய மனிதர்கள் என்று தாம் எண்ணி போர்க்கும் சொன்னார்கள். முன்பு கல்வித் திணைக்கள ஊழல்களைப் பற்றி எழுதியமையாலும் கதைத்தமையாலும் அதிகாரிகள் பகை கொள்ள, அதிகாரிகளை விழுந்து கும்பிட்டுப் பதவிகளைப் பெற்றோரும், பெற நினைத்தோரும் காரணமின்றி என்மீது பகை கொண்டனர். அதன் தாக்கம் தான் கபிரல் ரீவி.

சில நிறுவனங்கள் ஒன்றும் தெரியாத விழுந்து கும்பிடுவோரைக் கற்ற பெரும் அறிஞர் என்று மதிப்பளித்துக் கௌரவிப்பதால் துன்பகரமான பல நிகழ்வுகள் நாட்டில் நடைபெறுகின்றன. இதனால் தான் நான் ஒரு மூன்றாம் தரப் பாடசாலையில் 15 வருடங்கள் இருக்க நேர்ந்தது. நான் பேச்சாற்றலை வளர்க்கவில்லை. அதற்குக் காரணம் யாரின் பேச்சையும் இங்குள்ளவர்கள் கேட்கும் நிலையில் இல்லை. கேட்போர் குறைவாகையால் பேச நான் விரும்புவதில்லை. பேசப்பேச அழிந்து விடுகிறது. முன்பு பேச்சாற்றல் மிக்கவர்கள் பலர் இருந்தனர். அவர்கள் பேசுமிடங்களுக்கு மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். இப்போ பேச்சாளரும் திருவிழாக்காரரும் தான் பூசை முடித்த பின்பு பேச்சுக் கேட்பர். அதனால் பூசை தொடங்கு முன் பேச்சை வைத்தனர். அதனால் மக்கள் பேச்சு முடிந்த பின்பே கோவிலுக்கு வந்தனர்.

என்னால் ஆரம்பத்தில் கதை சொல்ல முடியவில்லை. தடுமாறினேன் சில நாட்கள் செல்ல நல்ல திறமை மிக்க பேச்சாளனானேன். சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்று நம் முன்னோர் அவதானிப்புடன் இதைக் கணித்திருந்தனர். பல இடங்களில் என்னைப் பேச அழைத்தனர். நான் மறுத்துவிட்டேன். நான் மேடைகளில் பேசிக்கொண்டிருந்தால் 200 நூல்களை என்னால் எழுதியிருக்க முடியாது. அந்நூல்களில் சுமார் இருபதாயிரம் கதைகள் உண்டு. பேசுவதைக் கேட்க 10 அல்ல 15 பேர் வருவர். ஆனால் எனது எழுத்தை இலட்சக்கணக்கான வாசகர்கள் வாசிக்கின்றனர். இப்போதும் இன்னும் 2000 ஆண்டுகளுக்குப் பின்பும் எனது எழுத்துக்கள் நிலைத்து நிற்கும். ஏனென்றால் நான் எழுதிய திருவாசகக் கதைகள், பகவத் கீதைக் கதைகள், திருக்குறள் கதைகள், மாயை பற்றிய கதைகள், திருவருட்பயன் கதைகள் உலகப் பிரசித்தி பெற்றவை. இவற்றை இதுவரை யாரும் எழுதவில்லை. இது ஒரு புதிய இலக்கிய வடிவம். அரசர்கள், தேவர்கள், விடுத்துச் சைவக் கடவுளான சிவன் சாதாரண மக்களுக்கு அருளிய கதைகள் தான் பெரியபுராணம். அதைப் பின் பற்றித்தான் நான் திருவருட்பயன் கதைகள் 100, திருவாசகக் கதைகள் 1503, மாயை பற்றிய கதைகள் போன்று பல ஆயிரம் கதைகள் எழுதியுள்ளேன். கதிரேசன் என்ற பாத்திரம் தெய்வத்தன்மை மிக்கதாகவும் அருளுடையதாகவும் வாழ்ந்து சிவனின் அற்புதத்திருவிளையாடல்களை விளக்குகிறது. நாயன்மார்களுக்குச் சிவன் அற்புதம் நிகழ்த்தியது போலக் கதிரேசனுக்காகச் சிவன் இரங்கிப் பக்தர்களுக்கு உதவுகிறார்.

எனது எழுத்துச் செய்யுள்களுக்குக் கதை வடிவம் கொடுத்துள்ளது. எமக்கருகில் வாழ்கின்ற மக்களுக்கு எமது கடவுளான சிவன் உதவமாட்டாரா? ஆகச் சரித்திர நாயகர்களுக்குத் தான் உதவுவாரா? என்ற கேள்வி மனதில் எழுந்தமையால் தான் செய்யுள்களுக்கு ஒரு புதிய வடிவம் கொடுத்தேன். இதை ஒருவர் கூட விமர்சிக்கவில்லை. விழுந்து விழுந்து வாசிக்கின்றனர். அதனால் இணையத்தில் இலட்சக்கணக்கான வாசகர்கள் உள்ளனர். ஆறு மாதங்களுக்கு முன்பு சிறந்த நூலென விருது கொடுக்கப்பட்ட நூல்களை இன்று காண முடியவில்லை. அதை விமர்சிக்கின்றனர். பல முறை ஒருவரிடஞ் சென்றால் கடைசியாக விமர்சனத்திற்குச் செல்பவரை அருகில் இருத்தி விட்டு எழுதித்தருவார்கள். இந்த நிலைமை எனக்குப் பல முறை வந்தமையால் இப்போது நான் விமர்சனங்களையோ அணிந்துரைகளையோ பெறுவதில்லை. நூலை வாசிக்காது விமர்சிக்கும் திறமை இவர்களிடம் உண்டு.

ஓர் அதிகாரியாகத் திறமைமிக்கவர் வந்தால் நியாயமாக நடந்து கொள்வார். வால் பிடித்து விழுத்து கும்பிடுவர் அதிகாரியாக வந்தால் தனது எசமானின் சொற்படி தான் நடப்பார். இதை நான் பல இடங்களில் கண்டுள்ளேன். நான் அதிகமாக எழுதியதாக நினைத்து எனது எழுத்தைக் கிட்னஸ்சில் பதிய எண்ணி ஆளுனர், அரசாங்க அதிபர் ஆகியோருக்கு 2018ஆம் ஆண்டு முதல் பதிவுத் தபால் மூலம் பலமுறை கோரினேன் பதிலே இல்லை. பதிவுத் தபாலுக்கும் பதிலளிக்காத பலர் இருக்கிறார்கள் இவர்களை யாரும் தட்டிக்கேட்க முடியாது. அவை வைத்தது தான் சட்டம். ஆனால் கடவுள் ஒருவர் இருக்கிறார் அவர் தனது பக்தர்களுக்கு உதவுவார் என்று அறிந்தும் படித்தும் உள்ள பலர் அதை நம்புவதில்லை. தனது பதவிக்காலத்தில் தனது அதிகார வன்மையை நினைத்துப் பூரிப்பர். அப்படி பூரித்த பலர் பதவிக்காலம் முடிய முன் அரசால் விரட்டப்பட்ட வரலாறு பலருக்கும் தெரியும்.

என்னை வேறொரு பெரிய பாடசாலைக்கு மாற்ற மாட்டேன். இவர் இங்கேயே ஓய்வு பெற வைப்பேன் என்றவர் போய்ச் சேர்ந்திட்டார். நான் கற்ற பாடசாலைக்கு ஒரு ஆசிரியராகத் தன்னும் வர வேண்டும் என்று எனது தந்தை விரும்பினார். கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரி நாம் படித்த காலத்தில் 2000 மாணவர்கள் கல்வி கற்றனர். நாளடைவில் அந்த அதிகாரியின் நடத்தையால் மாணவர் தொகை வீழ்ச்சியடைந்தது. அதற்குக் காரணம் அந்த அதிகாரி தான். அவர் தனது மனைவியின் விருப்புக் கேற்ப நடந்தமையால் தான் பாடசாலை வீழ்ச்சியடைந்தது. அத்துடன் அவர்கள் அடிக்கடி என்னுடன் முரண்படுவதால் எனது பாடசாலை மாணவர்களை அப் பாடசாலைக்குச் செல்ல வேண்டாம் என்றேன். அது பலித்தமையால் பாடசாலை வெற்றிடமானது.

தன்னைத் தவிர வேறு எவராலும் எதையும் செய்ய முடியாது என்று நினைப்பவன் தலை கீழாக மீண்டும் எழும்ப முடியாத படி விழுகிறான். அதனால் நான் ஒருபோதும் எனது எழுத்தை பெரிதாக மதித்ததில்லை. பகவத்கீதையில் கண்ணன், “நான் தேவையான போது

பொருத்தமானவர்களை மீண்டும் பிறப்பிப்பேன்'' என்கிறார். இன்று தேவார திருவாசகங்களின் பொருள் யாருக்கும் தெரியாது, "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுபவர் தான் செல்வர் சிவனடிக்கு'' என்ற மாணிக்க வாசகரின் கூற்றிற்கிணங்கவே நான் பஞ்சதந்திரக் கதைகள் போலச் சமயக் கதைகளை எழுதி வருகிறேன். பெரிய புராணத்தைப் படிப்போர் நாயன்மார்களது புதுமைகளையும் சிவனின் அருளையும் உணர்வது போல, எனது கதைகளைப் படிப்போர் என்னையும் சிவனையும் அறிந்து கொள்வர் இது எனக்குப் போதும்.

சங்ககாலம் முதல் இன்றுவரை திறமையானவர்கள் அரசராலோ மக்களாலோ மதிக்கப்படவில்லை. அதிகாரத்தில் உள்ளவர்களின் கொடுப்பனவுகளுக்காகவே புலவர்களும், மக்களும் வாழ்ந்தனர். அது தான் இன்றும் தொடர்கிறது. சங்க காலத்தில் வள்ளுவர், கம்பர் போன்றோரை மதிக்கவில்லை. அண்மையில் வாழ்ந்த பாரதியைக் கூட மதிக்கவில்லை. அப்போ மதிக்கப்பட்டவர்களை இப்போது அறியக் கூட முடியவில்லை. மதிக்கப்படாதவர்கள் பேரோடும் புகழோடும் மக்களின் மனதில் வாழ்கின்றனர். வள்ளுவர் மாலை என்றொரு நூல் இல்லாவிட்டால் சங்ககாலப் புலவர்களில் பலரை நாம் அறிந்திருக்க முடியாது.

எவருக்கும் நான் நன்மை செய்வேனே தவிரத் தீமை செய்ய மாட்டேன். ஆனால் என்னுடன் பழகிய அனைவரும் எனக்கு நம்பிக்கையுள்ளவர்களாக நடந்து கொண்டு அதிகாரிகளுக்கு உதவி செய்தனர். என்னிடம் எந்த விதமான தீய பழக்கங்களும் இல்லாததால் அதிகாரிகளால் என்னை எதுவும் செய்ய முடியவில்லை. இரண்டு ஆசிரியைகளுக்குத் தூர இடத்திற்கு இடமாற்றம் வந்தது அவர்களின் வேண்டுதலுக்கிணங்க நான் தலையிட்டு இடமாற்றத்தை ரத்துச் செய்தேன். பின்பு அவர்கள் அதிகாரிகளின் பக்கம் சேர்ந்து எனக்குத் தீமைகளைத்தந்தனர். எனக்குத் தீமை செய்ய முடியாது. ஏனென்றால் நான் பிறரிடம் எதையும் எதிர்பார்ப்பதில்லை. ஊழல்களைக் கண்டிப்பேன். நல்லதையே செய்கிறேன். வேண்டுமானால் அவர்கள் என்னை எதிர்க்கலாம். அதற்கெல்லாம் பயப்படாமையால் தான் நான் 15 வருடங்கள் ஒரு பாடசாலையில் கடமையாற்றினேன். விழுந்து கும்பிட்டிருந்தால், கைம்மாறு கொடுத்திருந்தால் நல்ல பாடசாலையைப் பெற்றிருக்கலாம். விழுந்து கும்பிட்டு நான் கற்ற பாடசாலைக்குச் சென்று அடிமையாக வாழ்வதை விட ஒரு சிறிய பாடசாலையின் துணிவு மிக்க அதிகாரியாக இருப்பதே எனது விருப்பம். அதைத்தான் எழுத்திலும் கையாழ்கிறேன். இங்குள்ள ஒரு பத்திரிகைக்கு எழுதினால் இங்குள்ளோர் அன்று வாசிப்பார் மறு நாள் அது பழம்பேப்பராகிச் சாமான் சுற்றக் கடைக்குச் சென்றுவிடும். இப்போ எனது இணையம் உலகெங்கும் பரந்துள்ளது.

அது போல ஒரு ஒளிபரப்பையும் ஆரம்பித்தால் உலகம் முழுவதும் அது பரவிப் புகழடையும். 15 வருடங்கள் நாவலர் தமிழ் வித்தியாலத்தில் அதிபராகக் கடமை புரிந்து அதன் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து ஒரு தனியார் பாடசாலையைப் போல மிளிரச் செய்தேன். இருப்பினும் பாடசாலையில் அதற்கான சான்றுகள் எவையும் இல்லை.

நான் பொறுப்பைக் கொடுத்து விட்டு வந்த நபர் எல்லாம் செய்வார் என்று நினைத்தேன். அவர் எதையும் செய்யவில்லை.

பாடசாலைக்கு மைதானம் இல்லை. அருகில் உள்ள பாடசாலைக்கு செல்வோம். அப்பாடசாலை நிர்வாகம் எம்மை மதிப்பதில்லை அதனால் பாடசாலைக்கு அருகில் இருந்த காணியை வாங்க முயற்சித்தேன் யாரின் ஆதரவும் கிடைக்கவில்லை. பெருந்துன்பப்பட்டு பாடசாலையின் முந்நாள் அதிபரான திரு சுவாமிநாதன் கனகசபையிடம் காணியை வாங்கினேன். உரிய திகதியில் பணம் கொடுக்காமையால் அவர் எமது சொல்லைக் கேளாது நீதிமன்றம் சென்றார். அங்கே உடனடியாகப் பணத்தைக் கொடுக்கும்படி நீதிபதி தீர்ப்பளித்தார். 15 வருடங்கள் அப் பாடசாலையின் அதிபராக இருந்தவர் ஒரு சில நாட்கள் பொறுக்க மறுத்துவிட்டார்.

யாரும் உதவாத நிலையில் எனது சொந்தப் பணத்தைக் கட்டினேன். இதெல்லாம் நான் பொறுப்புக் கொடுத்தவருக்குத் தெரியும். இருந்தும் அவர் அதை ஒரு பொருட்டாக எடுக்கவில்லை. எனது நண்பர் வேலாயுதபிள்ளை அவருடன் கதைத்தபோது அவர் வேலாயுதபிள்ளையை அனுப்பி எனக்குத் தொந்தரவு தருகிறாயா? என்று கேட்டார்.

எனக்குச் செருப்பால் அடிக்காத குறை. இது அடிக்கடி எனக்கு நிகழும் நிகழ்வு. அன்றிலிருந்து அவர்களின் தொடர்பை நீக்கிவிட்டேன். 16 வருடங்கள் கழிந்து விட்டன. நான் பாடசாலைப் பொறுப்பை இன்னொருவரிடம் கொடுத்திருந்தால் எனது பணத்தில் வாங்கிய அவ் விளையாட்டு மைதானத்திற்கு எனது பெயர் இடப்பட்டிருக்கும். நான் செருப்பைக் கொடுத்து அடி வாங்குபவன். இப்போது கபிரல் ரீவியினரிடம் செருப்படி வாங்கியுள்ளேன். இந்நிலை தொடர்ந்து வரும் ஏனென்றால் பழையவற்றைச் சாதிக்காது எப்போதும் எல்லோருக்கும் உதவும் பண்பு என்னிடமுள்ளது எனக்கு நேர்ந்தவற்றை கடவுள் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார். அவ்வப்போது தகுந்த தண்டனையை வழங்குவார்.

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் நான் கடமையாற்றிய போது பலவிதமான துன்பங்களை அதிகாரிகளும், அதிகாரிகளின் கையாட்களும் தந்தமையால் நான் பெருந்துன்பப்பட்டதோடு பல அனுபவங்களையும் பெற்றுக் கொண்டேன். அதனால் நல்லூர், கோப்பாய், யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் போது மிக்க அவதானத்துடன் செயலாற்றினேன். பொதுவாக அதிகாரிகள் கையாட்களை வைத்திருப்பர் அக் கையாட்களின் சொற்படி தான் பெரும்பாலும் நடப்பர். நான் கையாட்களை வைத்திருக்கவில்லை. எந்த ஒரு விடயத்தையும் நானே முடிவெடுப்பேன். யாருடனும் யாரும் வரக்கூடாது நேராக என்னோடு வந்து பேச வேண்டும் என்று முதன் நாளே சொன்னேன். அதனால் எல்லோரும் பயமின்றி வந்து தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டனர். இது எல்லாப் பிரச்சினைகளுக்கும் முற்றுப் புள்ளியிட்டது. இது ஒரு பொற்காலமாக அமைந்தது. நான் ஓய்வுபெறும் போது அதிபர்கள் மிகப் பெரியதொரு விழாவெடுத்தனர் அப்படி ஒரு விழா இதுவரை எடுக்கப்படவில்லை.

பத்திரிகை அல்லது ஒரு ஒளிபரப்பு நிறுவனத்தை நம்பியிருந்தால் நான் யாழ்ப்பாணத்துக்குள்ளேயே முடக்கப்பட்டிருப்பேன். இணையத்தை ஆரம்பித்தமையால் எனது எழுத்து உலகெங்கும் பரவியுள்ளது. என்னைத் தெரியாதவர்கள் இலக்கிய உலகில் இல்லை என்றளவிற்கு எனது எழுத்து உலகெங்கும் பரவியுள்ளது. விரும்பியோ விரும்பாமலோ எதற்கெடுத்தாலும் எனது இணையத்தைத் தான் நாட வேண்டும். அதனால் உலகின் விருதுகள் பலவும் என்னை வந்தடையும் என நான் நம்புகிறேன். திருவாவடுதுறை ஆதீனம் எனது திருவருட்பயன் கதைகள், மாயை பற்றிய தத்துவக் கதைகள் மிகவும் தரமானவை என்று விமர்சித்த போதும் இலங்கை கலாச்சாரப் பகுதி கண்டுகொள்ளவில்லை. இது அரசின் தவறல்ல. விருதுக்குத் தகுந்த நூல்களை அனுப்பும்படி யாழ்ப்பாண கலாச்சாரத் திணைக்களத்திற்கு அரசு விண்ணப்பம் அனுப்பினால் யாழ்ப்பாணத்தவர் தமது கையாட்களின் நூல்களையே அனுப்புவர். பிறகு எப்படி எம்போன்றோருக்கு விருது கிடைக்ககும். இப்படிப் பல விடயங்கள் நடைபெறுகின்றன. அப்படி நடைபெறும் போது தமிழ் மக்கள் அரசைக் குறை கூறுகின்றனர்.

இப்படியான நடவடிக்கைகளால் தான் யாழ்ப்பாணத்தில் ஒரு தரமான இலக்கிய நிகழ்வைத் தயாரித்தளிக்க முடியவில்லை. எந்த ஒரு துறையில் கலை நிகழ்வுகள் நடைபெற்றாலும் அடி வருடிகளுக்கே இடமளிக்கப்படுவதால் தரமான நிகழ்ச்சிகளை யாராலும் அளிக்க முடியவில்லை.

சகோதர இனம் கலைத் துறையில் முன்னேறியதற்குக் காரணம் அவர்கள் தடையின்றி இயங்குவதேயாகும். அதைவிட அவர்கள் ஜனாதிபதியுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வர். நாம் தொடர்பு கொண்டால் அக் கடிதம் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிக்கு அனுப்பப்படும். உயர் அதிகாரி குப்பைக் கூடைக்குள் போடுவார். இது எனக்கு நடைபெற்றது. இது சங்ககாலம் முதல் நடைபெறுவதால் திருத்தவே முடியாது. ஆனால் காலம் கை கொடுத்தது உண்மையை வெளிப்படுத்தும் அதனால் தான் கம்பர், வள்ளுவர், பாரதியார் போன்றோரின் ஆக்கங்கள் வெளிப்பட்டுத் தமது மேன்மையைப் பறை சாற்றுகின்றன. அப்படியான ஒரு நிலை எனக்கு விரைவில் வரும். அதற்காகத்தான் நான் யாருக்கும் தீமை செய்யாத போதும் எனக்குத் தீமை செய்தோரை எழுதி வருகிறேன். கம்பர் ஒரு முறை அரச சபையில் தடிமன் காரணமாகத் தும்பினார். அது பெருங் கதையானது. அது போல நான் எழுதும் குறிப்புகள் ஒரு நாள் பெரிதாகப் பேசப்படும்.

செயல்கள்தான் பாவத்தை உண்டு பண்ணும் என்று பலர் நினைக்கின்றனர். அது தவறு நினைவும் பாவத்தைத் தரும். உலக மொழிகள் அனைத்திலும் குறள் மொழி பெயர்க்கப்பட்டு அவர்களால் போற்றிப் படிக்கப்படும் போது தமிழராகிய கபிரல் ரீவியினரை எதிர்கால உலக மக்கள் எப்படி அங்கீகரிப்பார். ஒரு காலத்தில் எனது திருக்குறள் கதைகள் உலகளாவிய அளவில் புகழ் பெறும் போது கேவலப்படுத்தியோர் என்ன நினைப்பர். தமிழில்

ஒரு பழமொழி உண்டு, ‘‘ரோசமில்லாதவன் ராசாவில் பெரியவன்’’ என்று வெட்கம், ரோசம், மானம் இல்லாதவர்கள் தான் அடுத்தவரைக் கேவலப்படுத்துவார்.

நினைக்க நினைக்க வேதனையாகவுள்ளது. ஒரு கதையை எழுத எவ்வளவு திட்டமிட வேண்டும். எத்தனை நூல்களைப் படிக்க வேண்டும். நான் 1330 கதைகளைச் சொல்ல இரவு பகலாகத் திட்டமிட்டேன். பல நூல்களைக் கற்றேன். உற்சாகமாகச் சொன்னேன் அத்தனையும் பாழாகி விட்டது. எந்த விதமான பெறுமதியும் இல்லாத நிகழ்வுகளை உற்சாகமாக ஒளிபரப்புகிறார்கள் உலகப் பொது மறையை அழிக்க முற்படுகின்றனர். இவர்களது செயலால் நானே ஒளிபரப்பைத் தொடங்கவுள்ளேன் முன்பு பத்திரிகைகளில் எனது கதைகள் வெளிவராததால் இணையத்தை ஆரம்பித்தமையால் 200 நூல்களையும் அதில் பதிவிட்டேன். இது போலக் கீதை, குறள், திருவாசகம் என்பவற்றை பதிவிடுவேன்.

ஒரு தேவை இல்லாமல் போகும் போது தான் அதைத் தேட வேண்டிய தேவை ஏற்படும். அந்த வகையில் கபிரல் ரீவி என்னை ஒரு ஒளிபரப்பாளனாக்கி மேன்மையடையச் செய்து தான் பழியை ஏற்றது. நடப்பதெல்லாம் நன்மையானது என்று நம் முன்னோர் கூற்று உண்மையானது என்பதை இப்போது தான் நான் உணர்ந்து கொண்டேன்.

நேர்மையாகவும், ஒழுக்கமாகவும், திறமையாகவும் பாடசாலையை நடத்திய போதும் அதிகாரிகள் அதைக் கவனிக்கவும் இல்லை, பாராட்டவும் இல்லை. சாதாரணமாக ஒரு நிகழ்வை அவர்களது ஆதரவாளர்கள் நடத்தினால் அதைப் பெரிய விடயமாக எடுத்துக் கதைப்பார்கள். பராட்டுவார்கள். திறமையானவர்கள் மாவட்டம் முழுவதிலும் ஒதுக்கி வைக்கப்பட்டனர். திறமையானவர்களையும், அறிவுள்ளவர்களையும் மதிக்காமல் தமது கையாட்கள் 1990 ஆம் ஆண்டுக்குப் பின் தரமில்லாதவர்கள் நியமிக்கப்பட்டதால் நாளடைவில் திறமையானவர்கள் கல்விப் புலத்தை விட்டுப் படிப் படியாக ஒதுங்கிக் கொண்டனர். இது பற்றி மிக மிக விரிவாக எனது நாவல்களில் எழுதியுள்ளேன். அதை விட முன்மாதிரியாகப் பாடசாலையை நடத்திக் காண்பித்தேன்.

ஒருவர் சமூக சேவை செய்கிறார் என்றால் அவரின் சொத்தை மதிப்பீடு செய்தல் வேண்டும். பின்பு சமூக சேவை செய்யும் போது அவரது நடவடிக்கைகளை அவதானிக்காது அவரது சொத்தை மதிப்பீடு செய்தல் வேண்டும். துவிச்சக்கர வண்டியில் சென்றவர் காரில் சென்றால் என்ன நடந்ததென்பதை நான் சொல்லத் தேவையில்லை. சில சமூக சேவையாளர் பிரமுகர்களை புகழ்வர். எப்படியும் கைக்குள்ப் போட்டுக் கொள்வர். பின் அவர்களுக்கும் ஏதாவது கொடுப்பர் அதனால் அவர் சம்பந்தப்பட்டவரைப் புகழ்வார். பெரும்பான்மையான மக்கள் அவற்றை அவதானித்தாலும் எமக்கேன் வீண் வம்பு என்று பேசாதிருப்பர், சிலர் சிலரிடம் நலம் பெறுவதற்காகக் கதைக்காமல் இருப்பர். இதெல்லாம் இங்கு நடைபெறுகின்றன.

முன்பொரு காலத்திலே அரசன் ஒருவன் பொற் தகட்டில் தேவார திருவாசகங்களைப் பதித்துத் தினமும் பாடுவான். அப்படிப் பாடும் போது ஒரு சிலர் அதைக் கேட்டு மனனம் செய்துவிட்டு அதன் பொருளைப் பண்டிதர் ஒருவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வர். சிலநாட்கள் செல்ல பெரும் போர் வந்தது. அதில் அரசரும், சிப்பாயும் ஒரே நாளில் கொல்லப்பட்டனர். யமலோகம் சென்ற சிப்பாயைப் பல்லக்கில் தூக்கிச் சென்று யமனிடம் ஒப்படைத்தனர் அரசனை நடத்திக் கூட்டிச் சென்று யமனிடம் ஒப்படைத்தனர்.

யமன் எழுந்து சிப்பாயை வணங்கி, ''சிவபக்தரே, உம்மைச் சொர்க்கத்திற்கு அனுப்புகிறேன். அங்கு சகல வசதிகளோடும் இரும்'' என்று கூறிவிட்டு, ''அரசனை நரலோகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் அங்கு தகுந்த தண்டனை அளிக்கச் சொல்லுங்கள்'' என்றான்.

அரசர் குழப்பத்துடன் யமனைப் பார்த்தபோது யமன் சொன்னான், ''நீ பொன் தகட்டில் தேவார திருவாசகங்களைப் பதித்துப் படித்த போதும் சொல்லிய பாட்டின் பொருளை உணர்ந்து படிக்கவில்லை. அத்துடன் மக்களின் வரிப்பணத்தில் தான் அதைச் செய்தாய். இதை உணராத பாமரர் உன்னைப் போற்றிப் புகழ்ந்தனர். கோவிலுக்குச் செல்லும் போது ஆடை சுத்தமாக இருத்தல் வேண்டுமே தவிர பெறுமதியுள்ளதாக இருக்கக்கூடாது. தேவார திருவாசகங்களைப் பொருளுணர்ந்து இராகத்துடன் படிப்பதையே சிவன் விரும்புவார். அந்தச் சிப்பாய் வருவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பே சிவன் அவனை ஆடம்பரமாக வரவேற்கும்படி கூறிவிட்டார். அரசன் பணத்தை வீணாகச் செலவு செய்து புகழைத் தேடினானே தவிர அருளைத் தேடவில்லை. பொற்தகட்டை மக்கள் பரவசத்துடன் பார்த்தனர். இதனால் மக்களுக்கு என்ன லாபம்? அப் பாடல்களை மனனம் செய்ய முடிந்ததா? நீ சாதாரண ஏட்டில் தேவார திருவாசகங்களைப் பதித்துக் கொடுத்திருந்தால் மக்கள் பயனடைந்திருப்பர். பொற்தட்டின் காசைப் பெரும் போரால் தமது வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்குக் கொடுத்திருக்கலாம்'' என்றான். மன்னனை அழைத்துச் செல்லும் யம தூதர்களைப் ஆச்சரியத்துடன் பார்த்தான் சிப்பாய்.

எப்பொழுதும் தலைமைப் பதவியில் உள்ளவர்கள் சாதாரணமாக வாழவேண்டும். இங்கு அதிகாரிகளில் சிலர் குளிரூட்டப்பட்ட அறைகளில் நவீன வசதிகளுடன் இருக்கின்றனர். கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் ஆறுமுகநாவலரால் கட்டப்பட்ட இரண்டு சுண்ணாம்புக் கட்டிடங்களும், இரண்டு சிறிய கட்டிடங்களும் தான் உள்ளன. அதில் 800 மாணவர்கள் கல்வி கற்றனர். போர் நடைபெற்றமையால் இடம்பெயர்ந்து வந்த பிள்ளைகள் அளவுக்கதிகமாக இருந்தனர். அயற் பாடசாலையில் மிகமிகக் குறைந்த பிள்ளைகள் தான் கல்வி கற்றனர். அவர்களை அங்கு சென்று கற்கும்படி கூறினால் பெற்றோர் விம்மி விம்மி அழுவர். போகமாட்டோம் என்று அடம் பிடிப்பார்கள். அதற்குக் காரணம் எமது பாடசாலையின் கல்வித்தரம். இதெல்லாம் தெரிந்தாலும் ஒதுக்கப்படும் கட்டிடங்களைப் பிள்ளைகள் குறைவான தமக்கு விரும்பிய பாடசாலைகளுக்கு ஒதுக்குவர். நீண்ட காலத்தின் பின் உயர்திரு. மகிந்த

ராஜபக்ச ஜனாதிபதியானதும் அவரால் எட்டு வகுப்பறைகளைக் கொண்ட ஒரு மாடிக்கட்டடம் தரப்பட்டது. அதன் பின் இரண்டு வகுப்பறைகளைக் கொண்ட ஒரு மாடிக் கட்டடமும் தரப்பட்டது. அதனால் அவரை நான் தெய்வமாக மதிக்கிறேன். கட்டிடங்கள் தந்தமையால் 145 வருட இட நெருக்கடி தீர்ந்தது.

அவ்வப்போது எது எது தேவையோ அதையதைத் தருபவர்கள் தெய்வமாகக் கருதப்படுவர். இப்போது கபிரல் ரீவி மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளான சினிமாப்பாடல்கள், இடைக்கால சினிமாப்பாடல்கள், புதிய சினிமாப் பாடல்கள், சமையல், சிகை அலங்காரம் என்பவற்றை ஒளிபரப்புகிறது. அவற்றிற்குத் தான் மதிப்பு அதிகம் என்றும் கூறுகிறது. திருக்குறளைக் கேட்பாரில்லையாம். மக்களுக்கு அது விருப்பமில்லையாம். புதுமையான ஒரு அரிய கண்டுபிடிப்பு. இதை எனது வாசகர்கள் வாழ்த்திப் புகழ வேண்டும். உலகெங்கும் பரவிப் புதுமைகளைச் செய்ய வேண்டும். இதுதான் எனது ஆசை.

நான் இதுவரை யாரோடும் எந்த ஒரு பிரச்சினைக்கும் செல்லவில்லை. செல்லவும் மாட்டேன். ஆனால் வலிய அடிக்கடி தேடி வந்து அளவில்லாத துன்பங்களைத் தருவோரை விட்டு வைக்கலாமா? பெரும் உளத்தாக்கத்துக்குள்ளாகி நோயாளியாக வேண்டிய நிலை. ஏனென்றால் இக் கொடுமையை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வரும் நோய்களும் தொல்லைகளும் கபிரல் ரீவியால் தான் வந்து சேர்ந்தது. இதை உலகத்தவர்கள் உணர்ந்து கொள்ளவும். எனக்குத் துன்பம் செய்ய எதிரிகள் யாரும் இல்லை. எதிரிகள் இருந்தால் முன்பே செய்திருப்பர்.

2000 வருடங்களாகச் செய்யுள் வடிவில் இருந்த குறளுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவன் கதைகள் எழுதிய பின் கதை சொல்வது இங்குள்ளவர்களுக்குப் புதுமையாகத் தோன்றாது. ஏனென்றால் இங்குள்ளோர் செல்வாக்குள்ளோர், தனவந்தர்கள், பிரமுகர்களைத் தான் மதிப்பர். இவர்கள் சாதாரணமானவர்களை மதித்திருந்தால் எனது நூல்களை விமர்சித்திருப்பர். பகவத்கீதைக் கதைகள் 700 ரூபா. அப்படியிருந்தும் 11 வருடகாலமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 10 வருடங்களுக்கு முன்பு பிரமுகர்கள், பேராசிரியர்கள், கவிஞர்கள் என்று இங்கு இருப்போரிடம் 50 பகவத்கீதைப் புத்தகங்களைக் கொடுத்து விமர்சனம் ஒன்று எழுதித்தாருங்கள் என்று கேட்டேன். இன்றுவரை யாரும் தரவில்லை. முப்பத்தையாயிரம் ரூபா கடலில் கரைத்த உப்புப் போலாகிவிட்டது. அதன்பின் ஏராளமான நூல்களை வெளியிட்டுள்ளேன். ஒன்றைக் கூட யாருக்கும் கொடுக்கவில்லை. அதனால் துன்பமும் ஏற்படவில்லை.

ஒரு நூலை விமர்சிக்க வேண்டுமானால் அறிவோ கல்வித்தரமோ தேவையில்லை. அந்த நூலைப் படித்து அதன் கருத்தை முழுமையாக அறிந்திருத்தல் வேண்டும். தற்போது பாடம் சம்பந்தமாகத்தான் படிக்கிறார்கள். சென்ற வருடம் வந்த வினாக்களை விலக்கி விட்டுப் பரீட்சை எடுக்கும் வருடம் வரக் கூடிய வினாக்களை மட்டும் படித்துப் பாடமாக்கிப் பரீட்சை எழுதுகின்றனர். அதனால் பாடத்திட்டத்தின் பெரும் பகுதி படிக்கப்படுவதில்லை.

யாழ்ப்பாணத்தில் தற்போது வாழும் முது பெரும் அறிஞரான கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு ஒரு திறந்த பல்கலைக்கழகம். எந்த நேரம் சென்று எதைக் கேட்டாலும் மிகவும் விரிவாகவும் அர்த்தமுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் விளங்கப்படுத்துவதில் வல்லவர். ஒரு நூலை விமர்சனத்துக்காகக் கொடுத்தால் முழுமையாக வாசித்த பின்பே விமர்சனம் செய்வார். தனது அபிப்பிராயத்தையும் திருத்த வேண்டிய பகுதிகளையும் குறிப்பிடுவார். எழுத்துப் பிழைகளைக் கூடத் திருத்திவிடுவார்.

நான் பகவத் கீதைக்குக் கதை எழுதிவிட்டு அவரிடம் கொடுத்த போது மிகவும் பொறுமையாக வாசித்துத் தரமான ஒரு அணிந்துரையைத் தந்து உதவினார். அத்துடன் பல திருத்தங்களும் செய்தார். அவரது அறிவையும் யாழ்ப்பாணத்தவர் பயன்படுத்தவில்லை. அவர் தரமான பல நூல்களை எழுதியபோதும் அதனை யாரும் கண்டு கொள்ளவில்லை. தமது தேவைக்கு மட்டும் அவரைப் பயன்படுத்துவர். இவ்வாறு பல கல்வி மான்கள் புறக்கணிக்கப்பட்டனர். அவர் தானுண்டு தனது எழுத்துண்டு என்று என்னைப் போல இருப்பார். எல்லோருடனும் இனிமையாகப் பழகுவார். இன்சொல் பேசுவார். விழுந்து கும்பிடமாட்டார். விழுந்து கும்பிடுவோர் தான் இங்கு போற்றப்படுவது வழக்கம். ஒரு திறமையான விமர்சகர், எழுத்தாளர், கவிஞர், போதனாசிரியர் இவற்றை விட ஒரு தீர்க்கதரிசி. மனித மேம்பாட்டை விரும்பும் உத்தமர். தன்னை விடப் பிறர் அறிவுடையவர்களாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர். அதனால் கற்றவர்கள் அனைவரும் அவரிடஞ் சென்று பயன்பெறுகின்றனரே தவிர அவரைக் கௌரவப்படுத்தவில்லை. சில கௌரவப்படுத்தும் அமைப்புகள் சம்பந்தப்பட்டவர்களிடம் பணத்தைப் பெற்று அதன் மூலம் கௌரவிக்கப்படுகின்றனர். மதிப்பு, கௌரவம், புகழ், விருதுகள் ஒருவரைத் தேடி வரல் வேண்டும். இது போல நூல் வெளியீட்டு விழாக்களையும் வாசகர்கள் நடத்த வேண்டும். தானே நூலை அச்சிட்டுத் தாமே வெளியிட்டுப் பெரும் நட்டமடைந்த பலரை நான் கண்டு ரசித்தமையால் எனது நூல்களை நான் வெளியிடுவதில்லை. மணிமேகலைப் பிரசுரத்தினர், லங்கா பதிப்பகத்தினர் எனது நூல்களை வெளியிடுவர்.

கணனிப் பொறிகள் வந்த பின்பு தமிழ்நாட்டின் இலக்கியம் இமயமாக உயர்ந்துவிட்டது. ஏராளமான நூல்கள் தினமும் வெளிவருகின்றன. யார் எழுதுகிறார் என்று நினையாது எது தரமான நூல் என்று ஆராய்கிறார்கள் ஆனால் இங்கு சங்ககால மரபு தான் இன்றும் போற்றப்படுகிறது. அதனால் தான் ஒரு காலத்தில் பெரும் வளர்ச்சியடைந்த இலக்கியத்துறை இன்று தரைமட்டமாகியுள்ளது. நவீன வசதிகள் எதையும் யாரும் பயன்படுத்துவதில்லை. நூல்கள் வெளிவருவதும் தெரியாது, விருதுகள் கொடுப்பதும் தெரியாது.

எதிர்காலம் எப்படி இருக்கும் என்று தீர்மானிக்க முடியாது. ஆனால் இறந்தகாலத்தில் என்ன நடந்தது என்பது தெரியும். அதைப் பதிவு செய்து வைத்தால் எதிர்காலத்தினர் தெரிந்து கொள்ள வாய்ப்புண்டாகும். அதனால் தான் இவற்றை எழுதுகிறேன். விமர்சனங்கள் ஒரு

நூலின் விற்பனையை அதிகரிக்காது. ஒரு மனநிறைவுக்காகவும், மன மகிழ்ச்சிக்காகவும் தான் அதை நான் எதிர்பார்த்தேன். பின்பு தான் உணர்ந்து கொண்டேன். பல விமர்சனங்கள் நூலை வாசிக்காது எழுதப்படுகின்றன. சில எழுந்தாளரின் தகுதி, பதவி, பணம் பற்றிய தன்மையால் எழுதப்படுகின்றன. அத்துடன் சில எழுத்தாளர்கள் வாசிப்போர் குறைந்து வருவதாகக் கூறுகின்றனர்.

இது இயலாமையையே குறிக்கிறது. எனது நூல்களை இலட்சக்கணக்கானோர் வாசிக்கின்றனர் வெளிநாடுகளில் உள்ளோர் இங்கு வரும்போது வாங்கிச் செல்கின்றனர். எனது இணையத்தை இலட்சக்கணக்கான வாசகர்கள் வாசிக்கின்றனர். எழுதவேண்டியவற்றை எழுதினால் வாசிப்பார்கள். பழையவற்றை மக்கள் அறிந்த விடயங்களை எழுதினால் யார் வாசிப்பார்கள்.

எனது பேரன் சொன்ன தகவல் இது "பள்ளிக் கூடம் சென்றால் நாயன்மாரைப் பற்றிப் படிப்பிக்கிறார்கள். கோவிலுக்குப் போனால் பெரியபுராணத்தைப் பற்றிய பிரசங்கம். போதாக் குறைக்கு ரீவியைப் போட்டால் அதிலும் அது தான் இது ஏன்?" என்று கேட்டான். என்னால் பதில் சொல்ல முடியவில்லை. முடிந்தால் நீங்கள் யாராவது சொல்லுங்கள். சைவ சமயத்தில் எத்தனையோ இலட்சம் கதைகள் உள்ளன. சிவமகா புராணத்தில் கதைகளுக்குக் குறைவில்லை. தேவிபகவதம், விஷ்ணு புராணம், கருட புராணம் என்று புராணங்களே பதினெட்டு உண்டு. அதை விட ஆயிரக்கணக்கான கிளைக் கதைகள் மகாபாரதத்தில் உண்டு. இவற்றையெல்லாம் விட்டுவிட்டுப் பெரிய புராணத்தையும், கந்தபுராணத்தையும் இன்னும் எத்தனை நாட்களுக்குச் சொல்லிக் கொண்டிருப்பது.

உணவு, உடை என்பவற்றின் மூலப் பொருட்கள் ஒரு போதும் மாறுவதில்லை. அதைத் தைக்கும் முறையும் சமைக்கும் முறையும் தான் மாற்றமடைகின்றன. அதைப் போலக் கதைகளும் மாறாது. அதைச் சொல்லும் முறையை மாற்ற வேண்டும். தமிழ் நாட்டில் மாற்றிவிட்டார்கள். ஒரு பட்டிமன்றம் அல்லது பேச்சு இங்கு நடைபெற்றால் கேட்போர் தொகையை இரண்டு கைக்குள் அடக்கலாம். ஆனால் தமிழ்நாட்டில் கேட்போர் தொகை ஆயிரக்கணக்கு. இங்குள்ளவர்களும் தொலைக்காட்சியில் கேட்டு மகிழ்கின்றனர். இதைப் பார்த்தாவது எம்மவர் திருந்த வேண்டும். ஆனால் திருந்தமாட்டார்கள் ஏனென்றால் எம்மவரின் தலைக்கனம் அவர்களைச் செயற்படவிடாது.

என்னைப் பொறுத்தவரை இலங்கையில் பெரியோர் என்று நினைப்பவர்களை எனக்குத் தேவையில்லை. ஏனென்றால் கடந்த 50 வருடகாலமாக எனது நூல்களில் ஒன்றைக் கூட விமர்சிக்கக் கூட விரும்பாதவர்கள் இனி வந்து என்ன செய்யப் போகிறார்கள். முது பெரும் எழுத்தாளரான செங்கை யாழியானுக்கு அவர் தோற்றுவித்த இலக்கிய சபாக்கள் கூட நினைவஞ்சலி கூடச் செலுத்தவில்லை. ஒருவர் உயர்பதவியில் அல்லது பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருக்கும் காலத்தில் தமது நன்மைக்காக அவர்களைத் தேடிச் சென்று பட்டம் பதவி பெறுவர். ஓய்வு பெற்றால் யாரும் தேட மாட்டார்கள்.

ஒருவரைக் கௌரவிப்பதானால் உயிரோடு இருக்கும் போது கௌரவிக்க வேண்டும். இறந்த பின் மலர்வளையங்களுடன் வருவார்கள். மேடை அமைத்துப் பேசுவர். ஏராளமான உறவினர்கள் இருந்தால் பேச்சும் பலமாக இருக்கும். இவை எல்லாம் இறந்தவருக்குக் கேட்கும் என்ற நினைவில் பேசுவார்கள். இது தான் யாழ்ப்பாணத்தவரது நிலைப்பாடு.

வள்ளுவனை மதிக்கவில்லை. காரணம் குறளில் சடங்குசம்பிரதாயங்கள் இல்லை. முக்கியமாக வேள்விகள் இல்லை. அதனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு உழைப்பு இல்லை. அதனால் தான் குறளைச் சமணநூல் என்றனர். கற்பூரம் கொழுத்து, தேங்காய் உடை, நூல்கட்டு, கடவுளுக்குப் பூசை செய், தேவார திருவாசகங்களைப் பாடு என்று கூடக் குறள் சொல்லவில்லை. அதனால் தான் குறள் உலக வேதமானது. எம்மவர் ஒதுக்கிய திருக்குறள் இன்று உலக நூலானது போல இங்குள்ள கற்றவர்கள் மதிக்காத எனது நூல்கள் இன்று உலகப் பிரசித்தி பெற்று விட்டன. இன்று உலக நாடுகள் அனைத்திலும் வாழும் இந்துக்கள் எனது எழுத்தைத்தான் படிக்கின்றனர். இந்து கலாச்சார அமைச்சு எனது பத்துப் புத்தகங்களை வெளியிட்டு அறநெறிப் பாடசாலைகளுக்குத் துணை நூலாகக் கொடுத்துள்ளது. திருவாவடுதுறை ஆதீனம் எனது நூல்கள் சைவசித்தாந்தத்தைச் சிறப்பாக விளக்குகின்றன என்று சான்றிதழ் தந்துள்ளது. அதைவிட உலகச் சைவமகா நாட்டில் எனது நான்கு நூல்கள் வெளியிடப்பட்டன.

இதை விடக் கௌரவம் பெற்றவர்கள் யாராவது உண்டா? நான் சொன்னால் அது 2000 ஆண்டுகளுக்குப் பின்பும் நிலைத்து நிற்கும்.

ஆரம்பத்தில் குறள் சொல்லும் கதையை எனது முகநூலில் 150 மேற்பட்டவர்கள் கேட்டனர். பின்பு நிர்வாகத்தினரின் கேவலமான செயலால் 100 பேராகக் குறைந்து. பின் 50 பேராகி விட்டது. இது தொடர் நாவல். ஒரு குறளின் கதையைக் கேட்காவிட்டால் மறு குறளின் கதையைக் கேட்கமனமிராது. இவர்கள் சிலவேளைகளில் ஒரு அத்தியாயத்தையே விட்டு விடுவர். இப்போது சினிமாச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றைத் தனியாகப் போட்டு குறள்க் கதையை பலவற்றோடு சேர்த்துப் போடுகிறார்கள். அதைத் தேடிக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டம் அதைவிடப் பல சமயங்களில் போடாமல் விடுவதால் வாசகர்கள் சலிப்படைந்து விடுகின்றனர். குறளின் உரையைப் பல நிமிடங்களுக்கு ஒளிபரப்புச் செய்கிறார்கள். இதில் என்ன புதுமை இருக்கிறது. 2000 வருடங்களாகச் சொன்னதையே சொல்கின்றனர். விதி விலக்காகச் சில குறளுக்கு அணுவளவு மாற்றம் செய்கின்றனர். மாற்றம் செய்யப் பயம்.

புதிய புதிய உரையாளர்கள் அடிக்கடி குறளைப் பதிப்பிக்கின்றனர். ஒரு எழுத்தைக் கூட இவர்கள் மாற்றுவதில்லை. சிலர் சொற்களை இடம் மாற்றுவர். இதைத் தவிர வேறு எதுவும் செய்வதில்லை. இது எழுதி வெளியிடுவோருக்கு மகிழ்ச்சியைத் தருமே தவிர வேறு எதையும் உருவாக்காது. புத்தகங்களை யாரும் வாங்கமாட்டார்கள். ஏனென்றால் குறள் இல்லாத வீடே இல்லை. அது போலக் கேட்கவும் மாட்டார்கள். தமிழ்நாட்டில் குறள்களைக்

கொண்டு பல அருமையான நிகழ்வுகளைச் செய்கின்றனர். ஆனால் நடைமுறைக்கேற்ற கதைகள் எழுதவில்லை. நான் தமிழ்நாட்டில் பிறந்திருந்தால் மதிக்கப்பட்டிருப்பேன். அதனால் தான் பல இலட்ச ரூபா செலவு செய்து www.gunasegaram.com என்ற இணையதளத்தை ஆரம்பித்தேன். இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு வாசகர்கள் அதைப் பயன்படுத்துகின்றனர். இன்னும் சில காலத்தில் அவர்கள் எனது எழுத்தை மதிப்பர். நானில்லாவிட்டாலும் எனது எழுத்து நிலைத்து நிற்கும்.

பணம் பொருள் சேர்ப்பதைத் தவிர வேறு எதிலும் எம்மவர் அக்கறை காட்டுவதில்லை. சேர்த்த பணத்தையும் அனுபவிப்பதில்லை. இறந்த பின்பு சொர்க்கத்திற்கோ அல்லது நரகத்திற்கோ ஒருவர் அவற்றைக் கொண்டு செல்லும் நிலையிருந்தால் அவர்கள் கொண்டு செல்வதற்காகச் சாப்பிடவும் மாட்டார்கள்.

உயர் அதிகாரிகளும் அவர்களது குடும்பங்களும் பதவிக் காலத்தில் மதிக்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டு அரசனைப் போல வாழ்வர். பதவி போனதும் பத்துக்கு வீட்டுக்காரன் கூட நல்லது கெட்டதற்குப் போகமாட்டான். எனக்குத் தெரிந்த ஒரு அதிகாரியின் தாயார் 90 வயதில் இறந்த போது இலட்சக்கணக்கான மக்கள் செத்த வீட்டிற்கு வந்திருந்தனர். அவர் ஓய்வு பெற்ற பின் அவரது மனைவி இறந்த போது அவரது இரத்த உறவினரே வரவில்லை காரணம் கேட்டால், அவன் பதவியில் இருக்கும் போது வேண்டுமென்றே தன்னை இடமாற்றம் செய்தவராம். இது தான் உலகம் இதை நான் புரிந்து கொண்டதால் எழுதி வருகிறேன். புரியாதவர்கள் பாடங்கற்றும் திருந்துவதாக இல்லை.

பிறக்கும்போது எல்லோரும் குழந்தை தான். இறந்த பின்பு எல்லோரும் சவம் தான். இது போன்றது தான் எல்லாம். இதற்குள் போட்டி பொறாமை வந்தன. ஒருபோதும் ஒருவனது விருப்பங்கள் பூர்த்தியாவதில்லை ஓர் உயர் அதிகாரியின் மகன் கூலிக்காரனாகலாம். கூலிக்காரனின் மகன் உயர் அதிகாரியாகலாம். இது கடவுளின் விளையாட்டு இதைப் புரிந்தவர்கள் மிகவும் மகிழ்வாக வாழ்வர்.

கபிரல் ரீவியின் வேண்டத்தகாத செயல்களைப் பற்றி எழுதத் தொடங்கிப் பலவற்றை எழுதிவிட்டேன் இவை யாவும் நீங்கள் அறிய வேண்டியவை. நான் பல வருடங்களுக்கு முன்பு எழுதியவற்றை நீங்கள் இப்போது படித்து வருகிறீர்கள். இப்போது நான் எழுதியவற்றைப் பலர் பின்பும் படிப்பர்.

நானும் குறளுக்கு உரை எழுதியுள்ளேன். பல குறள்களுக்கு முன்னோர் எழுதிய உரை பொருந்தவில்லை. அதனால் புதிய உரை எழுதியுள்ளேன். உரையில் மாறுபாட்டை உணர முடியாது. ஆனால் கதையில் மாறுபாட்டை உணர முடியும். நான் 1330 குறள்களுக்கும் கதை எழுதியுள்ளேன். பல குறள்களுக்குப் புதிய உரை எழுதியுள்ளேன். உதாரணமாக வாழ்க்கைத்துணை நலம் என்ற அதிகாரத்தின் 55 ஆவது குறளுக்கு எழுதிய உரையையும் கதையையும் வாசித்துப் பாருங்கள். குறள் எழுதப்பட்ட காலத்தில் சாதி

அமைப்புக் கடுமையாகப் பின்பற்றப்பட்டது அத்துடன் பிராமணரே உயர்ந்த சாதியினராகவும் கற்றவர்களாகவும் இருந்தனர். சாதாரண மக்கள் படிக்கக் கூட முடியாது. அன்றைய நிலையில் எழுதப்பட்ட உரை. இன்று சாதாரண மக்கள் படித்துப் பிராமணரை விட உயர்ந்த பதவிகளில் இருக்கும் போது அது எப்படிப் பொருந்தும்?.

அதைவிட விருந்தோம்பல் என்ற அதிகாரத்தின் ஐந்தாவது குறள் 85 புண்ணியவான்களின் விளை நிலம் வித்திடாமல் பயிர் உண்டாக்கிப் பெருவிளைச்சலைத் தரும் என்ற உரை மகா தவறானது. உண்மைக்குப் புறம்பானது. முன்னைய காலத்தில் அவனது வயலில் கடவுள் விதைகளை விதைத்திருப்பார் என நம்பினர் அது இக் காலத்திற்குப் பொருந்தாது. அதற்கும் அதுபோன்ற மயக்கத்தைத் தரும் குறள்களுக்கும் கதை எழுதி தமிழ் நாட்டில் வெளியிட்டேன். வெளியீட்டு விழா மேடையிலோ அல்லது 15 வருடங்கள் கழித்தோ இன்று வரை யாரும் எனது உரையைப் பிழையென்று சொல்லவில்லை. இங்குள்ளவர்களும் சொல்லவில்லை. இங்குள்ளவர்கள் சொல்வதை யார் கேட்கப் போகிறார்கள். சொன்னவரே கேட்கமாட்டார். யாராவது அதைப் பற்றிக் கேட்டால் கதையால் சமாளிப்பார். அதற்கான திறமை இங்குள்ளோர்க்கு உண்டு.

இங்கு விருதுகளை எதிர்பார்க்க முடியாது. நான் எதிர்பார்பதில்லை. ஏனென்றால் இங்கு கொடுக்கப்படும் விருதுக்களை இங்குள்ளோரே மதிப்பதில்லை கலாபூசணம் விருது வருடா வருடம் கொடுக்கப்படுகிறது. அதைப் பாவித்து மகிழவோர் மிகமிகக் குறைவு. அத்துடன் தினமும் இந்திய தொலைக்காட்சியைப் பார்க்கிறோம் மிகத் தரமான நிகழ்ச்சிகள் என்று பலருடன் பேசிக் கொள்கிறோம். அதைவிடச் சிறப்பாக ஒரு நிகழ்வை நாம் தயாரிக்க வேண்டும் என்று எண்ணுவார் யாரும் இல்லை. அவர்களை விடத் தரமாக ஏன் தயாரிக்க முடியவில்லையென்றால் நாம் திறமையானவர்களைப் புறக்கணிக்கிறோம் என்பதே உண்மையான காரணமாகும். முக்கியமானவர்கள் ஒரு சிலரை நம்பி அவர்களைத் தவிரத் திறமையானவர்கள் எவருமில்லை என்ற நினைவுடன் செயற்படுவதே இதற்குக் காரணமாகும்.

ஒருவர் ஒரு கடையில் சாப்பிட்டு விட்டு அச் சாப்பாடு அமிர்தம் போன்றதென்று நினைத்துத் தினமும் சாப்பிடுகிறார். ஒரு நாள் அவரது நண்பன் வேறொரு கடையில் சாப்பாட்டைக் கட்டிக் கொண்டு வந்து கொடுத்தான். வேறு வழியின்றி மனமில்லாது அதை உண்டவர், தான் உண்ணும் கடைச் சாப்பாட்டை விடப் பல மடங்கு சுவையான சாப்பாடாக அது இருந்ததை உணர்ந்து வேதனைப்பட்டார். அது போன்றது தான் இதுவும் திறமைமிக்கவர்களை ஒதுக்கிறார்கள். இது எனது வாழ்வில் நடந்தமையால் தான் சொல்கிறேன். நான் எந்தச் செய்யுளுக்கும் கதை சொல்வேன் என்று பல நிறுவனங்களுக்குப் பதிவுத் தபால் எழுதியும், அவர்கள் என்னை அழைக்கவில்லை. ஊழல்களைப் பற்றிய உண்மைகளை எழுதியமையால் வந்த வினை இது. காலம் தான் இதற்குப் பதில் கூற வேண்டும். ஒரு நல்ல செயலைப் பகிரங்கமாகச் செய்தால் அதை ஊக்குவித்து அறிவிக்க

வேண்டியவர்களுக்கு அறிவித்து ஆவன செய்வதை விட்டு விட்டுப் பொறாமைப்பட்டு கெடுக்க நினைக்கின்றனர். இது எனது வாழ்வில் பல முறை நடந்துள்ளது.